DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.60/2017

**prosecution witness: PW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசலிங்கம் | தொழில் | : | மாவட்ட வன அலுவலர், புதுக்கோட்டை |
| த/பெ. | : | சோணை | வயது | : | 57 |
| கிராமம் | : | இராமநாதபுரம் | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமநாதபுரம் | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**10.06.2025**

(1ம் எதிரி ஆஜர், 2ம் எதிரி குற்றம் அற்றுவிட்டது, 3 எதிரிகள் மனுவின் பெயரில் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் அ படிவம் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவ விபரங்கள் எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பவம் 06.09.2015ம் தேதி காலை 04.30 மணிக்கு நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் மண்டபம் வனச்சரக அலுவலகத்திற்கு வந்தோ, சம்பவ இடத்திற்கு வந்தோ அன்றைய தேதியில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் விசாரணை செய்யக்கூடிய தகுதிபெற்ற அதிகாரிகள் யாரும் இல்லாத காரணத்தினால் தான் இந்த வழக்கு சொத்து இராமநாதபுரத்திற்கு என்னிடம் கொண்டு வரப்பட்டது என்றால் சரியல்ல வனக்காப்பாளருக்கு அதிகாரம் உள்ளது அதனால் அவர் விசாரணை செய்ததோடு நான் மண்டபம் வனச்சரகத்தை கூடுதலாக கவனித்ததால் எனக்கு தகவல் கொடுத்தன் பெயரிலும், பாதுகாப்பு கருதியும் இராமநாதபுரத்திற்கு வரவழைத்தேன்.

சம்பவ தேதியில் மண்டபம் வனச்சரக அலுவலகத்தில் இந்த வழக்கை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற வனக்காப்பாளர் இருந்தார் என்றால் சரிதான். அவ்வாறு இருந்தும், அன்றைய தேதியில் எதிரிகளை கைது செய்வதற்கோ, பொருட்களை அத்தாட்சியின் பெயரில் கைப்பற்றுவதற்கோ அவர் நடவடிக்கை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல அத்தாட்சியில் வனக்காப்பாளர் திரு.வடமலையான், திரு.கண்ணப்பன் ஆகியோர்கள் சொத்துக்களை கைப்பற்றியும், அத்தாட்சி தயார் செய்தும் அறிக்கை செய்துள்ளார்கள்.

இந்த வழக்கில் உள்ள அத்தாட்சியில் சம்பவத்திற்கு மறுநாள் 07.09.2015ம் தேதி நான் தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான் விசாரணை செய்து 07.09.2015ம் தேதி என பதிவு செய்தேன் ஆனால் கைப்பற்றிய சாட்சிகள் 07.09.2015ம் தேதி ஒப்பமிடவில்லை. அத்தாட்சி இருவேறு தேதிகளில் தயார் செய்யப்பட்டது என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை சாட்சிகள் தேதி

குறிப்பிடவில்லை. பொதுவாக அத்தாட்சி தயார் செய்யப்படும்போது யாரிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதோ அவர்கள் கையொப்பமும் பெறப்படவேண்டும் என்றால் சரிதான். ஆனால், இந்த அத்தாட்சியில் இந்த வழக்கு சொத்து யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதோ அவர்கள் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கு சொத்துக்களை நான் முதன் முதலில் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் இராமநாதபுரம் வனச்சரக அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். என்னிடம் வனக்காப்பாளர் வடமலையான் என்பவர் தான் வழக்கு சொத்துக்களை என்னிடம் கொண்டு வந்தார். படிவம்–95 சம்பவத்திற்கு மறுநாளான 07.09.2015ம் தேதி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளை எந்த தேதியில் என்னிடம் கொண்டு வந்தார்கள் என்றால் 06.09.2015ம் தேதி இரவு 07.00 மணிக்கு கொண்டு வந்தார்கள். எதிரிகளிடமிருந்து குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் பெறப்படவில்லை விசாரணை நடத்தி முடிக்க இரவு 10.00 மணிக்கு மேல் ஆகிவிட்டதால் மறுநாள் காலை வாக்குமூலம் பெறுவதற்காக முடிவு செய்யப்பட்டது. H நமூனா சம்பவத்திற்கு மறுநாள் 07.09.2015ம் தேதி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

வழக்கு சொத்தான கடல் அட்டைகள் சாதாரணமாக மீனவர் வலையில் சிக்கக்கூடியது என்றால் சரியல் ஒரு சில கடல் அட்டைகள் வலையில் சிக்கலாம் ஆனால் 280 கிலோ வலையில் சிக்காது. இந்த வழக்கில் சொன்னமாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அநாமத்தாக கிடைத்த வழக்கு சொத்தை கைப்பற்றி உண்மையான குற்றவாளிகளை தப்பிக்க செய்வதற்காகவும், வழக்கு சொத்திற்கு தோததாக வழக்கை ஜோடிக்க வேண்டும் என்பதற்காகத்தான் வழக்கு சம்பவ நேரத்திலிருந்து எதிரிகள் தப்பி விட்டதாகவும் சொல்லி எதிரிகள் மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மண்டபம் வனச்சரக அலுவலகம் மண்டபம் காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதி என்றால் சரிதான். எதிரிகளும் மண்டபம் காவல்நிலைய சரகத்திற்கு உட்பட்ட வேதாளை பகுதியைச் சார்ந்தவர்கள் என்றால் சரிதான். இந்த மண்டபம் காவல்நிலைய அதிகாரிகளிடம் இந்த வழக்கில் சம்பந்தமில்லாத இந்த எதிரிகளின் பெயர்களை விசாரித்து இந்த வழக்கு சொத்துக்களை வழக்கில் ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல வனக்குற்றம் என்பதால் காவல்துறையால் விசாரிக்கமுடியாது.

ஓம்/–S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.